# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூலை 23, 2026 Weekly E-paper • July 23, 2026





# திராவிட இயக்கத் தமிழர் பேரவை

# 17 ஆம் பொதுக்குழுத் தீர்மானங்கள்

## பெரியாரின் சுயமரியாதைக்கு முன்னால் துள்ளுகிறது விட்டில் பூச்சி!

காசு. நாகராசன்

## ஆர்.எஸ்.எஸ். செல்லப்பிள்ளை

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்

சொக்கலிங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ●திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜுலை 23, 2026 Weekly E-paper ●July 23, 2026


# திராவிட இயக்கத் தமிழர் பேரவை
# 17 ஆம் பொதுக்குழுத் தீர்மானங்கள்






## இரங்கல் தீர்மானம் 1

திராவிட இயக்கத் தமிழர் பேரவைக்காகப் பெரிதும் உழைத்து, அண்மையில் இயற்கை எய்திய

தஞ்சை செல்லக் கலைவாணர், பேராசிரியர் ஆரோக்கியசாமி, பொள்ளாச்சி அ.இராசுகுமார் ஆகியோருக்கு இப் பொதுக்குழு கண்ணீர் அஞ்சலி செலுத்தி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது .

## தீர்மானம் 2

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக தமிழ்நாட்டின் முதல்வர் தான் இருக்க வேண்டும் என்கின்ற தமிழ்நாடு சட்டப்பேரவையின் தீர்மானத்தை அன்றைய ஆளுநர் ஆர் என் ரவி கிடப்பில் போட்ட போது தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றம் சென்று அதற்கு அனுமதி பெற்றது. எனினும் தற்போது அமைந்துள்ள தவெக அரசு ஆளுநரின் வழி காட்டலுக்கு பயந்து துணைவேந்தர்கள் தேர்வுக் குழுவில் தமிழ்நாடு அரசின் பிரதிநிதி ஆளுநரின் பிரதிநிதி பல்கலைக்கழக சிண்டிகேட் பிரதிநிதி ஆகிய மூவருடன் பல்கலைக்கழக மானிய குழு பிரதிநிதி ஒருவரையும் தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் ஒரு பிரதிநிதியையும் சேர்த்து ஐவர் கொண்ட குழுவை அமைக்க ஒப்புக் கொண்டுள்ளது.

பல்கலைக்கழக மானிய குழுவின் பிரதிநிதி துணைவேந்தர் தேர்வு குழுவில் சேர்க்கப்பட்டுள்ளது தேவையற்ற சிக்கல்களை உருவாக்கும் என்பதோடு மாநில அரசின் உரிமைகளில் தலையிட்டு குழப்பம் ஏற்படுத்தும் என்பதால் தமிழ்நாடு அரசு ஆளுநரின் ஐவர் கொண்ட குழுவை புறக்கணித்து ஏற்கனவே இருந்த மூவர் குழுவுடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

## தீர்மானம் 3

"வந்தே மாதரம்" பாடலின் முதல் இரண்டு பத்திகள் அனைவருக்கும் பொதுவாக இருந்தாலும், அடுத்து வரும் பத்திகளில் அவை இந்துக்களுக்கு மட்டும் ஏற்புடையதாகவும் மத நல்லிணக்கத்திற்கு எதிரானதாகவும் உள்ளன. ஆனால் அதன் முழுப் பாடலையும் மாநில, ஒன்றிய அரசுகளின் நிகழ்ச்சிகளில் கட்டாயம் பாட வேண்டும் என்றும், அதனை மறுத்தால் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க

Prevention of insults to the National Honour Bill 2026 என்னும் சட்ட முன் வரைவை வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவர பாஜக அரசு முடிவு செய்துள்ளது. மத நல்லிணக்கத்திற்கு எதிராகச் சனாதன மதவெறிப் போக்குடன் கொண்டுவரும் இந்தச் சட்ட முன் வரைவை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

## தீர்மானம் 4

தவெக அரசு அமைந்த பிறகு கடந்த இரண்டு மாதங்களில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பாலியல் வன்முறை நிகழ்வுகள் பெருகி உள்ளன. அவற்றில் தவெக நிர்வாகிகளுக்கும், ஒரு சட்டமன்ற உறுப்பினருக் கும் தொடர்பு இருப்பதாகத் தெரிந்தாலும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களைப் பாதுகாக்கும் தவெக அரசை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

## தீர்மானம் 5

ஏழை எளிய மாணவர்களின் நலனுக்கு எதிரானதும், செல்வந்தர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே சாதகமானதுமான நீட் தேர்வு முறை கேள்வித்தாள்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

முன்பக்கத் தொடர்ச்சி...

கசிவு உள்ளிட்ட பல்வேறு குளறுபடிகளுக்கும் முறைகேடுகளுக்கும் வித்திட்டு உள்ளது. எந்த விதத்திலும் நியாயமற்ற நீட் தேர்வு முறையை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் 6

தவெக ஆட்சி அமைந்தால் விவசாயிகள் அனைவருக்கும் கடன் தள்ளுபடி என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு, தற்பொழுது பல்வேறு நிபந்தனைகளை விதித்து பெரும்பான்மையான விவசாயிகளை வஞ்சிப்பதை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆண்டுதோறும் மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12-ம் தேதி காவிரி டெல்டா பகுதிகளுக்கு கண்ணீர் திறந்துவிடப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அதற்கு எந்த முயற்சியும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் தவெக அரசை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

### தீர்மானம் 7

தவெக அரசு மின்சாரத் துறையில் பொதுமக்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்குவதாகக் கூறிவிட்டு, 500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தும் பயனீட்டாளர்களுக்கு மிகக் கடுமையான மின் கட்டண உயர்வினைத் திணித்து இருப்பதற்கு இக்கூட்டம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 8

சேலம் மாவட்டம் கெங்கவல்லி வட்டத்தில் உள்ள ஒதியத்தூரில் நீண்ட காலமாகத் திறக்கப்படாமல் இருக்கும் டாக்டர் அம்பேத்கார் சிலையைத் திறக்க கோரியிருந்த நிலையில், ஏற்கனவே அதிகாரிகளின் அனுமதியின்பேரில் சிலையைத் திறந்த 15 இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

டாக்டர் அம்பேத்கரை கொள்கைத் தலைவராக ஏற்றுள்ளதாகக் கூறிக் கொள்ளும் தவெக அரசு, பேச்சளவில் இல்லாமல் செயல் வடிவில் சிலையைத் திறந்த அந்த இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டும் என இப்பொதுக் குழு கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் 9

தமிழ்நாட்டின் பெருமைக்குரிய மாமனிதர், மேனாள் முதலமைச்சர் பேறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பற்றி மிகவும் தரம் தாழ்ந்து கீழ்த்தரமாக நாகரிகமற்ற முறையில் பேசி வரும் தமிழா தமிழா பாண்டியன் என்னும் பேர்வழி மீது தமிழ்நாடு அரசு அவதூறு வழக்கு தொடுத்து, கைது செய்ய வேண்டும் என்று இப்பொதுக்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## பொறுப்பாளர்கள் நியமனம்



ஆவை கோபிநாத்



தஞ்சை கணேசன்



திராவிடச் செல்வன்



செந்தாமரைக் கண்ணன்

*மேற்கு மண்டலத்துணைப்பொதுச்செயலாளராக தோழர் ஆவை கோபிநாத்தும், கிழக்கு மண்டலத் துணைப் பொதுச் செயலாளராகத் தோழர் தஞ்சை கணேசனும் நியமிக்கப்பட்டனர்.*

*மேற்கு மண்டலத் துணைப் பொதுச் செயலாளரான தோழர் கா.சு.நாகராசன், வடக்கு மண்டலத் துணைப் பொதுச் செயலாளரான தோழர் மரைக்காயர் ஆகியோரின் பொறுப்பு விலகல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. திராவிடம் 100 பொறுப்பில் இருந்து தோழர் உமாவின் விலகலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.*

*திராவிடம் 100 காணொளி, தகவல் தொழில்நுட்ப அணியின் பொறுப்பில் இனி இயங்கும்!*

*தோழர் திராவிடச்செல்வன் என்கிற லோகபாலன் தலைமை நிலையச் செயலாளர் ஆகவும், தோழர் முத்தையா குமரன் செய்தித் தொடர்பாளராக தோழர் செந்தாமரைக் கண்ணனுடன் இணைந்து செயல்படுவார்.*

### 'கருஞ்சட்டைத் தமிழர்' - மாதமிருமுறை

"கருஞ்சட்டைத் தமிழர்" மின்னிதழ் இனிவரும் காலங்களில் மாதம் இருமுறை இதழாக, 20 மற்றும் 05 ஆகிய தேதிகளில் வெளிவருமாறு மாற்றம் செய்யப்பட்டு உள்ளது!

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஆர்.எஸ்.எஸ். செல்லப்பிள்ளை

மாநில சுயாட்சி, நீட் தேர்வு, இந்தித்திணிப்பு போன்ற மக்கள் விரோத ஒன்றியத் திட்டங்களுக்குத் தமிழ்நாட்டில் இடம் தராமல் எதிர்த்து நின்றது தலைவர் ஸ்டாலின் தலைமையிலான திமுகழக அரசு.

இப்போது, திமுக கூட்டணியில் இருந்த கட்சிகளை இழுத்து வைத்துக் கொண்டு மைனாரிட்டி ஆட்சி நடத்தும் விஜய் தலைமையிலான தவெக அரசு, ஒன்றிய அரசின் மக்கள் விரோதத் திட்டங்களுக்கு வழிவிடத் தொடங்கியுள்ளது.

கட்சி தொடங்கியதில் இருந்தே பாஜகவை விமர்சனம் செய்வதில்லை விஜய், தவெக அரசு. ஏற்கனவே சிபிஎஸ்சி பள்ளிகளுக்குத் தடையில்லாச் சான்று வழங்குகிறது.

திமுகழக ஆட்சியில் நவோதயா பள்ளிகளுக்கு அனுமதி தரவில்லை, அதன் மூலம் இந்தியைத் திணிக்க ஒன்றியம் முயன்றதால். நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தது.

இதுகுறித்த விசாரணையின்போது 'தமிழகத்தில் நவோதயா பள்ளிகள் தொடர்பாக ஆலோசனை செய்து வருகிறோம்' என்று தவெக சார்பில் சொல்லப்பட்டு இருக்கிறது.

"ஆலோசனை செய்கிறோம்" என்ற ஒரு வார்த்தையில், நாளை நவோதயா பள்ளிகள் தமிழ்நாட்டில் இந்தியைச் சுமந்துகொண்டு நுழைய வழிவகுக்கக் கூடும் என்ற தொனியைத் தருகிறது. இது தமிழ்நாட்டிற்கு ஆபத்தாய் முடியும்.

ஏற்கனவே வேல் தூக்கிக் கொண்டு தமிழ்நாட்டில் அண்ணாமலையை ஆடவைத்தது ஆர்எஸ்எஸ்/ பாஜக. மக்கள் அதைஏற்கவில்லை. இப்போது விஜயை அரவணைத்து ஆடுகிறது.

அன்று திருமாவளவன் சொன்னார் "ஆர்எஸ்எஸ்-இன், செல்லப் பிள்ளை விஜய்" என்று.

இன்று அது உறுதியாகிறது!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## நட்புக் கழக 'இலக்கிய அரங்கம்'




திராவிட நட்புக் கழகம் சார்பில் 12-07-2026 அன்று சென்னையில் 'இலக்கிய அரங்கம்'நடைபெற்றது. "ஒரு கவிதை, ஒரு சிறுகதை, ஒரு திரைப்படம்" என்ற தலைப்பில், பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் ஓர் இலக்கியச் சொற்பொழிவாற்றினார். தோழர்கள் தனிஸ்லாஸ் தலைமையில், ஹசன் முகமது வரவேற்புரையாற்ற, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார் தோழர் ஸ்ரீவித்யா. நன்றி நவின்றார் தோழர் தமிழ்க்குமரன். நட்புக் கழகத் தலைவர் ஆ.சிங்கராயர் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த இலக்கியக் கூட்டம் இனிது நிறைவுபெற்றது.

# காரைக்குடியில் "தோழர் சுபவீயுடன் ஒரு சந்திப்பு"





திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக 19.06.2026 மாலை காரைக்குடியில் "தோழர் சுபவீயுடன் ஒரு சந்திப்பு" நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் தோழர் துரைசெல்வம் முடியரசன் வரவேற்றார். தோழர் முத்துக்குமார் தொடக்கவுரையாற்றினார். நமது பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள், இன்றைய அரசியல் சூழல் குறித்து மிகச்சிறப்பான கருத்துரை வழங்கினார்.


அதனைத் தொடர்ந்து தோழர்கள் தங்களது கருத்துகளையும், கேள்விகளையும் முன்வைத்துத் தோழருடன் கலந்துரையாடினார்கள். முனைவர் நடராசன், இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் செ.நாகநாதன், ஆசிரியர் கலைவாணி, திமுக நகர இளைஞரணி துணைச்செயலாளர் கார்த்தி, தி.க.மாவட்டச் செயலாளர் ம.கு. வைகறை உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துரையாடினார்கள்.

நிகழ்வில் திமுகழக முன்னோடி கரு அசோகன், வல்லநாடு நடராசன் உள்ளிட்ட மாணவர்கள் தங்களது பெற்றோருடன் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். தோழர்கள் குமரன்தாஸ், ந.ஸ்டீபன், முகமது ராஜா ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டம் பேரவையின் மாவட்டத் தலைவர் தி.க.கலைமணி நன்றி உரையுடன் இனிது நிறைவு பெற்றது.

# திண்டுக்கல்லில் நூல் அறிமுகம்

திண்டுக்கல் மாவட்டத் திராவிட இயக்கத்தமிழர் பேரவை சார்பில் நூல் அறிமுகக் கூட்டம் 27.06.2026 அன்று மாவட்டத் தலைவர் தி.பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ப.புலேந்திரன் வரவேற்றார். பேராசிரியர் ஜெயராமன் எழுதிய "வந்தே மாதரம் பார்ப்பனியத்தின் தேசியகீதம்" நூல் குறித்துப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், ஊடகவியலாளர் ப.திருமாவேலன் எழுதிய "கலைஞரின் பெரியார் நாடு" நூல் குறித்துத் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர்





இராம.வைரமுத்து இருவரும் உரையாற்றினார்கள். கொள்கை பரப்புச்செயலாளர் கி.ரவிச்சந்திரன் தொடக்கவுரை ஆற்றினார். மேனாள் மாவட்டத் தலைவர் செ.தமிழினியன் முன்னிலை வகித்தார். நிறைவாக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ச.ஞானசேகர் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவுபெற்றது.

# தஞ்சையில் "வீழ்வோம் என நினைத்தீரோ...! ".




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் 04-07-2026 அன்று தஞ்சையில் "வீழ்வோம் என நினைத்தீரோ...!" என்ற கருத்தரங்கம் நடை பெற்றது. இக்கருத்தரங்கில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம் கருத்துரை ஆற்றினார். தோழர்கள் காசிநாதன், ரங்கசாமி, கணேசன் உள்ளிட்டோரின் பணிகளாலும், தஞ்சை மாவட்டத் திமுக செயலாளர் உள்ளிட்ட பொறுப்பாளர்களின் ஆதரவினாலும், பேரவையின் சார்பில் இக்கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian

# பெரியாரின் சுயமரியாதைக்கு முன்னால் துள்ளுகிறது விட்டில் பூச்சி!

காசு. நாகராசன்

தமிழ்நாட்டில் அமைந்திருக்கிற நடிகர் விஜய் தலைமையிலான தவெக ஆட்சியை, பின்னால் இருந்து இயக்கிக் கொண்டிருக்கிறது சங்பரிவார் கும்பல் என்பது வெட்டவெளிச்சம் ஆகிவிட்டது. வரலாற்றுக் காலத்தில் இருந்து பார்ப்பனர்கள் மேற்கொண்டு வருகிற சூழ்ச்சி அரசியலை இன்றைய அரசியலோடு ஒப்பாய்வு செய்து, தந்தை பெரியார் வழியில் இளைஞர்களை சுயமரியாதை உணர்வாளர்களாக மாற்றி தமிழ்நாட்டு அரசியலில் பெரியாரியலை மறு கட்டமைப்பு செய்ய வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம்.

கழகங்கள் இல்லாத ஆட்சி என்று கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பே விளம்பரம் செய்தது பாஜக. அதாவது திமுக - அதிமுக அல்லாத ஓர் ஆட்சி, அதுவும் பாஜக ஆட்சி என்பதே அந்த விளம்பர முழக்கத்தின் நோக்கம்.

1967 இல் அமைந்த திமுக ஆட்சி காரணமாக, தமிழ்நாட்டு அரசியலில் சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி, மாநில உரிமைகள் ஆகியவற்றோடு, தமிழ்நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, மருத்துவம், தொழில், வேலைவாய்ப்புகளும், உள்கட்டமைப்பு வசதிகளும் பெருமளவு வளர்க்கப்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா அம்மையாரின் காலத்தில் சுயமரியாதை என்பது விலக்கப்பட்ட போதும், எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் மாநில உரிமைகள் விட்டுக்கொடுக்கப்பட்ட போதும்

மேற்கண்ட பொதுவான வேலைத்திட்டங்களில் இருந்து அதிமுகவால் பெரியளவில் விலகிட முடியவில்லை. அதனால் சங் பரிவார் கும்பலால் வடநாடுகளில் செய்வது போல மக்களைப் பின்னோக்கி இழுத்துப் போகும் சமூக விரோத, பிரிவினை, வன்முறை அரசியலை தமிழ்நாட்டிற்குள் செய்ய முடியவில்லை.

பொதுவாக ஆட்சியாளர்களின் மீதான மக்களின் இயல்பான சில குறைபாடுகள் காரணமாக கோபம் எழும், சிலபல தவறுகளால் ஆட்சி மாற்றங்களும் நிகழும். அதேசமயம் பார்ப்பனர்களால் தயாரிக்கப்பட்ட புதிய புதிய தலைவர்கள் கூட திராவிடத்தின் அடிப்படைக்கு வெளியே சிந்திக்கவோ, செயல்படவோ முடியாத அளவிற்குத் தமிழ்ச் சமூகம் பெரியார், அண்ணா, கலைஞர் போன்றவர்களால் பண்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால், இந்தமுறை பார்ப்பனர்கள் புதிய கோணத்தில் சிந்தித்துத் திட்டமிட்டு தமிழ்நாட்டு அரசியலில் முன்னேற முயன்று இருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; நாம், கொஞ்சம் பின்னோக்கித் தள்ளப்பட்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதன்முறையாக கருப்பு வண்ணமில்லாத ஒரு கொடி, திராவிடம் என்கிற பெயரில்லாமல் தமிழ்நாட்டைப் புறந்தள்ளி தமிழக அடையாளத்தோடு பெயரிடப்பட்ட ஒருகட்சி, திராவிட இயக்கக் கோட்பாடுகள் எதையும் பேசாமல், அரசியலற்ற கோமாளித்தனமான,

நாகரிகமற்ற ஆபாசமான பேச்சு, கவர்ச்சியான நடிப்பு, போலியான வேடம் ஆகிய நடவடிக்கைகளை மட்டுமே மூலதனமாகக் கொண்ட ஒரு நடிகரின் கட்சி தமிழ்நாட்டின் ஆட்சியில் அமர வைக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இதுவரை தமிழ்நாட்டு அரசியலைச் சூழ்ந்திடாத அவலமாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விலை வைத்தல், பணத்துக்காகவும், பதவிக்காகவும் கட்சி தாவுதல் ஆகிய அரசியல் சீர்கேடுகளையும் முதன்முறையாக தமிழ்நாட்டு அரசியல் களம் இப்போது சந்தித்து வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத் திட்டங்களில் முதன்மையானது இருமொழிக் கொள்கை. அதைச் சீர்குலைக்கும் ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையைத் திணிக்கும் ஆயிரம் சிபிஎஸ்சி பள்ளிகளுக்குத் தடையின்மைச் சான்று வழங்கப் படுகிறது. அதேநேரம் கிராமப்புற தொடக்கப்பள்ளிகள் மூடப்படுகின்றன.

கோயில் பணம் கோயிலுக்கு மட்டுமே செலவிடப்படும் என்று சொல்லுகிற பார்ப்பனர், அறநிலையத்துறைக்கு அமைச்சர் ஆகிறார். அவரோ பழனி முருகனின் நூறு கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை இரண்டுகோடிக்குக் கைமாற்றிவிட்ட பிரச்சனையில் தன்னை யாரேனும் குற்றம் சாட்டினால்... என்று மிரட்டுகிறார்.

கட்சி தொடங்கியதிலிருந்து முன்னாள் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை அவமரியாதையாகப் பேசுவதை இன்றைய முதலமைச்சர் நடிகர் விஜயும், அவரது அமைச்சரவை சகாக்களும் மேற்கொண்டு வருகிறார்கள். இன்றைக்கு சமூக ஊடகங்களில் கேள்வி கேட்டாலே அவமதிப்பு வழக்குப்போட்டு ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கிறார்கள்.

இன்னொருபக்கம், தமிழ்நாட்டின் கடனை அடைப்போம், மதுவை ஒழிப்போம், ஜாதி மதத்தை வீட்டில் பூட்டிப் பத்திரப்படுத்துவோம் என்று கிளம்பியிருக்கிறார் அய்பிஎஸ் அண்ணாம'லய்'.

மேற்கு வங்கத்தில் முப்பதாண்டுகளுக்கும் மேலாக நீடித்த பொதுவுடமை அரசை அகற்றத் தாற்காலிகமாக ஒரு மாற்று அரசை உருவாக்கி, தற்போது நேரிடையாகவே பாஜக ஆட்சியை அமைத்திருக்கிற சங்பரிவார், தமிழ்நாட்டிலும் அதே நடைமுறையில் ஓயாது முயன்று முதற்கட்டமாகத் திராவிடக் கட்சிகளின் ஆட்சியை மாற்றி மாற்றத்தின் பேரால் ஒரு பொம்மை ஆட்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

இதன் பின்னணியில் சங்பரிவார் பார்ப்பனர்கள் இருக்கிறார்கள் என்கிற உண்மையை மேற்கு வங்கம் உணராமல் இருக்கலாம். ஆனால், பெரியாரின் தமிழ்நாடு இதை நன்கு உணர்ந்திருக்கிறது.

பார்ப்பன சூழ்ச்சி அரசியலை நூற்றாண்டுக்கும் முன்பே முறியடித்த வரலாறு திராவிட இயக்கத்திற்கு, சுயமரியாதை இயக்கத்திற்கு இருக்கிறது.

வரலாற்றிலிருந்து நாம் கற்ற பாடங்களின் வழியாக இன்றைக்குக் கிளைவிட்டிருக்கிற ஆரிய பார்ப்பன சூழ்ச்சி அரசியலையும் நாம் முறியடிப்போம்! முறியடிக்க உறுதியேற்போம்!!

●